# இலங்கை வித்தியா போதினி

# THE CEYLON JOURNAL OF EDUCATION

( *Tamil Section.* )

பிரதம பத்திராதிபர் :

திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள், பதில் வித்தியாதிபதி.

பத்திராதிபர் சபை :

முதலியார் குல. சபாநாதன் அவர்கள்.
திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்.
திரு. எம். எஸ். எம். ஹட்டாட் அவர்கள்.

மனேஜர் :— திரு. சி. குணசேகர.

வருடச் சந்தா ரூபா **3-00**

சந்தாப் பணத்தை கொழும்பு, வித்தியா கந்தோர், இலங்கை வித்தியா போதினி மனேஜர் என்ற விலாசத்துக்கனுப்பவேண்டும்.

அறிவித்தல்:—சேக் மூலம் பணம் கொடுத்தல். சில வங்கிகள் ரூ. 10/-க்குக் குறைந்த செக்குகளுக்கும் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து வரும் செக்குகளுக்கும் கொமிஷன் எடுக்கின்றபடியால் சந்தாதார் அவ்வகைச் செக்குமூலம் பணம் கொடுக்கும்போது கொமிஷனையும் செக்குகளில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

தொகுதி-7 | ஜூலை—1949. | பகுதி-6


பத்திராதிபர் குறிப்புகள்.

## கட்புலக் கல்வி

சிறுருக்குக் கல்விகற்பிப்பதில் கண்ணிறைற் பார்த்தறிவதற்கு உதவியான சாதனங்கள் இன்றியமையாதவையெனப் பன்னெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றது அதை உணர்ந்தோ அன்றியோ ஆசிரியர்கள் அவற்றைப் பல வழிகளிலும் கையாண்டுள்ளனர். படிப்பித்தலுக்கு உதவியான படம், கரும்பலகைவரைதல், “மாதிரி,”

"பிரதிரூபம்" என்பன ஆசிரியர்களுக்கு நன்கு தெரிந்தவையாகும். ஆனால் அநேக ஆசிரியர்கள் தமது நாளாந்த வேலையில் அவற்றை ஒழுங்காக உபயோகிக்கின்றனரோ என்பது ஐயத்திற் கிடமானது. உதாரணமாக, ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதை விளக்குவதற்காகக் கரும்பலகையில் படந்தீட்டும் முறையைக் கையாளுவதைக் காண்பதரிது. "படிப்பும் படமும்" என்ற சூத்திரம் சொல்லளவில் போற்றப் படுகிறதேயன்றி செய்கையளவில் புறக்கணிக்கப்படுகின்றது. வித்தியாசம் வித்தியாசமான படங்களும் போதிய அளவுக்கு உபயோகிக்கப்படவில்லை. மேலும் அவை உபயோகிக்கப் படவேண்டிய அளவு உபயோகிக்கப்படவுமில்லை. தற்காலம் வெளியாகும் பாடப்புத்தகங்களில் ஏராளமான படங்களிருப்பதைக் காணலாம். ஆனால் இப்படங்கள் பாடத்தை விளக்குவதற்கு உதவியான கருவிகளென்பதை எவராவது மதிக்கின்றனரோ வென்பது ஐயத்துக் கிடமானதாகும். நன்கு ஒழுங்கு செய்து பல இடங்களையும் போய்த் தரிசிப்பதினால் சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் பயன்களை நோக்குமிடத்து நூதன சாலைகள், அல்லது தொழிற் சாலைகள்போன்ற நவீன கைத்தொழில் வாழ்க்கை நடக்குமிடங்கள், கொழும்புத் துறைமுகம்போன்ற இடங்களைத் தரிசிப்பதற்கு வாய்க்கும் சந்தர்ப்பங்கள் உபயோகிக்கப் படவேண்டிய அளவுக்கு பயன்படுத்தப் படாதிருக்கின்றன. கடந்து சென்ற இக்காலங்களில் வளர்ந்த மாணவர்கள் சரித்திர சம்பந்தமான இடங்களுக்கு அழைத்துசெல்லப்பட்டபோதிலும் இப்பிரயாணங்கள் வெறும் கண்காட்சியாய் முடிகின்றனவேயன்றி அவ்வவவிடங்களையும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட உண்மைகளை ஒரு நோக்கம்பற்றி அவதானிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றனவல்ல.

கட்புலனைக் கொண்டு அறிவைப் பெறுவதற்கு உதவியான சாதனங்கள் ஒருவர் படிப்பிக்கும் பாடத்தைக் கவர்ச்சிகரமானதாயும் உயிருள்ளதாயுமாக்குவதற்கு மிகவும் உபயோகமானவை. தம்மாண [illegible] காரணங்களினதும் மிருகங்களினதும் இயற்கையான சூழ

லுக்குக் கூட்டிச் சென்று அவற்றைப் பற்றிப்படிப்பிக்கும் இயற்கைப் பாட ஆசிரியர் பிரத்தியட்சமான பொருட்களையே காட்டிப் போதிக் கின்றவராகின்றனர். ஆனால் வகுப்புச் சாளரத்துக்கூடாக ஒரு தரைப் பிரிவை மாணவர் நேரே பார்க்கக் கூடியதாயிருக்கும் பொழுது அத்தரைப்பிரிவைப் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் ஒரு படத்தை உப யோகிப்பராயின் அவ்வாசிரியர் தரை யென்பதைச் சொல்லளவில் மாத்திரமே விளக்குகினறனர். அத்தகைய பாடத்தில் ஜீவனோ அல் லது பொருளுறுதியோ இருக்க மாட்டாது. பிரத்தியட்சமாக இயல் பாகவே காணக்கூடிய பொருட்களுக்கு அடுத்தபடித் துறையிலிருப் பன எவையாயின் இயற்கைச் சூழலிலிருந்து பிரித்தெடுத்து நூதன சாலையில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் போன்றனவாம். ஒரு உண்மையான இயற்கைப் பொருளின் "மாதிரி" அல்லது பிரதிரூபம் உண்மையினின்றும் சிறிது அப்பாற்பட்டதாயினும் படிப்பித்தலில் அது மிகவும் உபயோகமாகின்றது. உதாரணமாக, ஒரு படத்திலும் பார்க்க ஒரு எஸ்கிமோவின் வசிப்பிடமான "இக்லூ" என்பதின் பிரதிரூபம் ஒரு சிறுபிள்ளைக்கு நல்ல விளக்கத்தைக் கொடுக்கின்றது. "இக்லூ"வின் பிரதிரூபம் கனவடிவினதாகவும் "படம்" பரப்பளவினதாகவும் இருத்தலினால் முன்னயது பின்னையதிலும் பார்க்க உண்மைப் பொருளுக்கு அண்மையா தாயிருக்கிறது. படுப்பித்தலில் பிரதிரூபம், மாதிரி, படம், என்பவை எத்தகைய உபயோகமுள்ளவையாயிருப்பினும் அவைகள் உண்மையான பொருட்களின் தன்மை அல்லது நிலைமையை மாத்திரம் காட்டுகின்றமையால் உண்மையான பொருளிலிருப்பது போல அவை களில் தெளிவும் திட்பமும் இல்லை. இங்நிலைமையிலேதான் நவீன முறையில் கண்டுபிடிக்கப்பட்டவை ஆசிரியருக்கு உதவியாகின்றன.

நிலைமையை மாத்திரம் எடுத்துக்காட்டும் படத்திலும் பார்க்க "சினிமா" விசேஷமுடையது. எங்ஙனமெனில் அது உலகத்தை எங்கள் கண்முன்கொண்டுவருகிறது மட்டுமன்றி அதை உயிர்த்துடிப் போடும் சக்தியோடும் எடுத்துக் காட்டுகின்றது. படம் ஒருஅங்கத்தை

அல்லது ஒரு நிலைமையை மாத்திரம் விளக்குகின்றது. ஆனால், சினிமா தொடர்பான பல அங்கங்களை அல்லது நிலைமைகளை இயற்கையின் ஒருபாகமாக எடுத்துக் காட்டுகின்றது. சினிமாப் படங்களினாலாம் பயனை இலங்கையிலுள்ள ஆசிரியர்கள் சிந்தாமணி, மணிமேகலை, ஹரிச்சந்திர, அம்பிகாபதி போன்ற சினிமாப்படங்களிலிருந்துதான் உணர்ந்தனர். தொடர்பான எவ்விளக்கப்படங்கள் தாமும் சினிமா மாத்திரம் தரக்கூடிய அசைவு உணர்ச்சியைக் கொடுக்கமாட்டா. சினிமாத் திரையில் ஒரு துன்பகரமான நிகழ்ச்சி உண்மைபோல் நடக்குமிடத்து அதைப் பார்க்குமெவரும் மெய்மறந்துதாம் காண்பது ஒரு நாடகம் என்பதைக்கூட மறந்து விடுகின்றனர். கோவலனின் கழுத்து கற்பாறையில் வெட்டுப்படும்போது சிந்தனையில் ஆழ்ந்துவிடுகின்றோமல்லவா? சந்திரவதி தன் மகனைக் கட்டியணைத்துக் கதறுவதைப் படத்தில்கண்டு கண்ணீர்வடிக்காத பெண்களுமுண்டா? இத்தகைய கதைகளைச் சினிமாவானது அடுத்தது காட்டும் பளிங்குபோல் காட்டுகின்றதன்றோ? இராமாயணம், பாரதம், நளவெண்பா, உதயணன் சரித்திரம் போன்ற புத்தகங்கள் சி. பா. த. பரீட்சைக்குப் பாடப்புத்தகங்களாக உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் அவைகள் மனித வாழ்க்கையை—அதன் இன்ப துன்பங்களை, போராட்டங்களை, பிரதிகாலங்களை, வெற்றிகளை எடுத்துக்காட்டும் நூல்களென்பதை சினிமாப் படத்திரையிலேகண்டுதான் மாணவர்கள் உணர்ந்தனர்.

"சினிமா" என்பது நேரான படிப்பித்தல் முறைகளிலொன்றாகவும் இருக்கலாம். "சக்திவாய்ந்த குறிப்புச்சித்திரங்கள்" படங்கள் மூலம் கதையைச் சொல்லுகின்றன. உதாரணமாக, அத்தகைய குறிப்புச்சித்திரங்கள் மூலம் ஒரு எண்ணெய்க் கிணற்றுச் சரித்திரத்தை நேரே பார்க்கக் கூடியதாக விருக்கின்றது. மாணவர் துணைக்கருவி தொழிற்படுவதைப் பார்ப்பதோடு எண்ணெய் எவ்வெக் கற்பார்படைகளின் கீழுள்ளதென்பதை அத்தரையின் வெட்டுமுகத்தோற்றம் காட்டும். பின்னர் எண்ணெய் தரையின் மேற்பரப்பின் மேலெழுந்து

சுத்தமாக்கப்படுமிடங்களுக்குச் செல்லுவதையும் மாணவர் காண்பர். அப்படியாக மாணவர் நேர்முகமாக இவற்றைப் பார்ப்பதினுல் ஒரு உணர்ச்சியுண்டாகின்றது. சம்பவங்களெல்லாம் அவ்வவற்றின் பல்வேறு நிலைகளிற்காணப்படுகின்றன வாகையால் அது கண்ணைக் கவருவதோடு மாணவனுடைய அனுபவத்தையும் விளக்கத்தையும் கூட்டுகின்றது. இச்சிறப்பான அனுபவமில்லாத காரணத்தினுற்ருன் இலங்கையிலுள்ள மாணவர்களிலநேகர் "எண்ணெய்க் கிணறுகள்" நம் நாட்டிலுள்ள "தண்ணீர்க் கிணறுகள்" போன்றன எனப் பலகாலும் நினைத்திருக்கின்றனர் போலும்.

பாடசாலைகளில் உபயோகத்திற்கெனப் பல சினிமாப் படக்கொம்பனிகள் கடந்த சில வருடங்களாக விசேஷ விஷயங்களைப் பற்றிய சினிமாப் படங்களைத் தயாரித்திருக்கின்றனர். இலக்கியம் சம்பந்தமாக மாத்திரமன்றி சரித்திரம், பூமிசாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம் போன்ற பாடங்கள் சம்பந்தமாகவும் சினிமாப்படக்காட்சிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. கட்புலனைக் கொண்டு அறிவைத் தேடுவதற்கு உதவியான அதிகப்பிரயோசனமுள்ள இச்சாதனங்கள் நம் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கோ அன்றில் பெரும்பாலான பாடசாலைகளுக்கோ இன்று கிடைக்கக்கூடியதாயில்லை. கல்விக்குதவியான இவ்விதசாதனங்கள் நமக்குக் கிடைக்கும் வரையும் கிடைக்கக்கூடிய மற்றும் அத்தகைய சாதனங்களை நாம் நன்கு உபயோகிக்கலாமல்லவா? வளர்ச்சியடையும் மனதுக்கு உலகஇரகசியங்களை எடுத்துக்காட்டுவதில் மற்றும்புலன்களிலும் விசேஷமான கட்புலனை ஆதாரமாகக்கொண்டு ஒரு பிள்ளை அடைந்த அனுபவங்கள் வழியால் நாம் பாடசாலையிற் போதிக்கும் கல்வியைச் சிறப்பானதாக்கலாமன்ரே!

12.3 ஜூன் 47

# மொழிப் பயிற்சி

## இரண்டாம் பிரிவு

### வாசிப்புப் பாடங் கற்பித்தல்

(முற்றொடர்)

முந்திய கட்டுரையில் பேச்சுப் பாடங் கற்பித்தலைப் பற்றி ஆராய்ந்தோம். இந்தக் கட்டுரையில் வாசிப்புப் பாடங் கற்பித்தலைப் பற்றிச் சில விஷயங்களை அறிவோம். ஒரு மொழியின் முப்பிரிவுகளான பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் பேச்சினைப் பாலர்கள் பாடசாலைக்கு வருதற்கு முன்பே பழகிக் கொள்கிறார்கள். வாசிப்பையும் எழுத்தையும் பெரும்பாலும் பாடசாலையிலேயே கற்கிறார்கள். ஆதலின் பொருத்தமான முறைகளை மேற்கொண்டு, மாணவர்களின் தனியியல்புகளையும் குறை நிறைகளையும் அனுபவத்தையும் ஆராய்ந்தறிந்து, வாசிப்புப்பாடத்தைக் கற்பித்தல் வேண்டும். தொடக்கத்தில் எல்லா மாணவர்களும் ஒரேயளவான தேர்ச்சியைப் பெறுவார்களென்றெண்ணக்கூடாது குறைவாயிருக்கும் மாணவர்களைத் தெருட்டல் பொருத்தமற்றது. பிழையின்றி விரைவாக வாசிப்பதற்கு, முதலிலே மொழியறிவும் இன்றியமையாத தென்பதை ஆசிரியர்கள் பலர் கருதுவதில்லை அனுபவமும், அதனாலேற்படும் மொழி அறிவும் பெருகிய பின்னரே மாணவர்கள் எவற்றையும் தடையின்றி வாசித்து விளங்க முடியும் ஆகவே பாடசாலைகளிற் படிப்பிக்கும் வாசினைப் புத்தகங்கள் மாணவர்களுடைய அனுபவத்திற்கும், மொழி அறிவுக்கும் பொருத்தமானவையாய் இருத்தல் வோண்டும். நமது பாடசாலைகளில் உபயோகப் படுத்தப்படும் வாசினைப் புத்தகங்களிற் பல பொருத்தமற்றன பாடப் பொருள், உரைநடை என்பவற்றில் மாத்திரமன்றி அச்சிடப்பட்டுள்ள முறையிலும் அவை மிக்க குறைபாடுடையன. நிற்க;

முற்காலந் தொடக்கம் தமிழ்ப் பாடசாலைகளில் வாசிப்பு மிகச் சிறந்த ஒரு பாடமாகக் கருதப்பட்டு வருகிறது. மற்றைய பாடங்கள் யாவற்றையுங் கற்பதற்குப் பெரும்பாலும் வாசிப்பே ஆதாரமாயிருக்கிறது. ஓய்வு நேரங்களில் விரும்பிய நூல்களைப் படித்து இன்பமடைவதற்கும் வாசிப்பே துணை செய்கிறது.

வாசிப்பதென்றால் எழுத்துருவத்தில் உள்ளதொன்றை உரைத்து வாசிப்பதென்றே முற்காலத்தில் கருதினர். பாடசாலைகளிலும் உரத்து வாசித்தலையே வாசிப்புப்பாடமென்று எண்ணிக் கற்பித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது எழுத்து வடிவிலிருக்கும் சொற்கள் குறிக்கும் பொருளை உணர்வதே வாசித்தலின் நோக்கம் என்பதை யாவரும் அறிவர். இப்பொருளை வாசிப்பவர் மாத்திரம் உணர வேண்டின் மௌனமாக வாசிக்கலாம்; பிறரும் அறியவேண்டின், உரத்து வாசிக்கலாம். ஆகவே வாசிப்பை மௌன வாசிப்பு, உரத்த வாசிப்பு என இரண்டாகப் பிரிக்கலாம்.

மௌன வாசிப்புக்கும் உரத்த வாசிப்புக்கும் வேண்டிய பயிற்சியும் ஆற்றல்கள் யாவும் ஒரே தன்மையவல்ல. மௌன வாசிப்பு நிகழும் போது வாயினுக்கு ஒரு தொழிலுமில்லை. ஒலிவடிவப் பேச்சை நாம் கேட்டு விளங்குவதுபோல் வரிவடிவத்தையுங் கண்ணுற் பார்த்துப் பொருளைத் தெரிந்து கொள்கிறோம். வாசிப்பில் மூன்று பகுதிகளாகிய குறி அல்லது வரிவடிவம், அதன் ஒலி வடிவம், பொருள் என்பவற்றில் மௌன வாசிப்பில் குறியும் பொருளும் சேர்ந்துள்ளன. உரத்து வாசித்தலில் குறி ஒலி பொருள் எனும் மூன்று மிசைந்துள்ளன. வரிவடிவை ஒலிவடிவாக்கிச் சொல்வது வாசித்தலாகாது. வாசிக்கும் பகுதியின் பொருளை விளங்குதலையே வாசித்தல் என்பது குறிக்கிறது. ஆகவே பிழையின்றி உச்சரிக்கவும், தடையின்றிப் பொருளை விளங்கவும் மாணவரைப் பயிற்றல் வேண்டும். மாணவர்களுடைய உச்சரிப்பை ஆசிரியர்கள் கேட்டுப் பிழைகளைத் திருத்தல் இலகுவானது.

ஆனல் அவர்களுடைய பொருளைக் கிரகிக்கும் ஆற்றலை அளவிடுவது அவ்வளவு இலகுவாயிருக்காது.

இனி மௌன வாசிப்பையும் உரத்தவாசிப்பையும் எவ்வெவ் வகுப்புகளுக்குக் கற்பிக்க வேண்டும் ஒவ்வொரு வகுப்பிலும் இவை எவ்வளவுக்கு இடம் பெறவேண்டும் என்பவற்றைச் சிறிது கருதுவோம். தொடக்கத்திலே பாலர் வகுப்புகளில் உரத்து வாசித்தலே அதிகம் நிகழ வேண்டும். ஏனெனில் இப்பருவத்தில் பாலர்கள் பேசும் சொல்லை, அச்சிலுள்ள வார்த்தைகளோடு ஒன்று படுத்த வேண்டுமாதலின் என்க. அன்றியும் பாலர்கள் எழுத்துக்களின் உருவத்தை மட்டிட்டுப் பிழையின்றி உச்சரிக்கிறார்களா என்பதையும் அறியவேண்டுமன்றோ! இன்னும் உரத்து வாசிப்பதால் மௌனவாசிப் புக்குரிய பழக்கங்களையும் பெற்றுக்கொள்ளலாம். சொற்களைச் சேர்த் துப்படித்தலையும், வரிகளை நேரே வாசித்தலையும் மாணவர்கள் பயிலவும் அவர்கள் ஒரே பார்வையில் பார்த்தறியக்கூடிய பகுதியின் நீளம், அதனையறியும் வேகம் முதலியனவற்றை ஆசிரியர்கள் தெளிவாக அறிந்து கொள்ளவும் உரத்த வாசிப்பு இன்றியமையாதது. உரத்து வாசித்தலால் ஒலி யின்பத்தைச் செவிவாயிலாகவும் அனுபவிக்கலாம். ஆகவே ஆசிரியருடைய உதவியின்றி நல்லாக வாசிக்கும் ஆற்றல் உண்டாகும் வரையும் மாணவர்கள் உரத்து வாசித்தல் வேண்டும். ஐந்தாம் அல்லது ஆறும் வகுப்புவரையும் உரத்த வாசிப்பு இடம் பெறலாம். மேல் வகுப்புகளில் இலக்கியத்தைச் சுவைத்தற்கும் ஒரு நூலிலோ அல்லது ஒரு எழுத்துப் பிரதியிலோ உள்ளதைப் பிறரறியச் செய்வதற்குமே உரத்த வாசிப்பு நிகழவேண்டும்.

பாலர் வகுப்பிலேயே மௌனவாசிப்புந் தொடங்கப்படவேண்டும். பலவருடங்களாக உரத்த வாசிப்பினை மாத்திரம் பயின்றவர்களுக்குப் பின்னர் மௌனவசிப்பைப் பயிற்றுவது கஷ்ட சாத்தியமாக விருக்கும். பாலர் கீழ்ப்பிரிவிலே கரும்பலகையினுதவி கொண்டு மௌனவாசிப்பை

நடத்தலாம். உதாரணமாக ஆசிரியர் கரும்பலகையில் நட, இரு, ஓடு, எழும்பு முதலிய கட்டளைகளை எழுதி அவற்றைப் பார்த்து அப்படியே செய்யும்படி பாலர்களைக் கேட்கலாம். இத்தகைய வாசிப்புக்கு இச் சொற்கள் எழுதிய அட்டைகளையும் உபயோகிக்கலாம் தனிக் கட்டளைகளின்பின் 'கதவைத்திற' 'புத்தகத்தை எடுத்து வா' போன்ற சொற்றொடர்களையும் வாசிக்கச் செய்யலாம்.

இரண்டாம் மூன்றும் வகுப்புக்களில் வாசினைப்புத்தகங்களிலுள்ள பாடங்களை மௌனமாக வாசிப்பிக்கலாம். மௌன வாசிப்பின் நோக்கம் பொருளை விரைவாகக் கிரகித்தலே யென்று முன்னர்க் கூறினோம். இதனை மாணவர் நன்கு செய்கிறார்களா என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ளவேண்டும். இதற்குப் பல வழிகள் உள. ஒவ்வொரு பந்தியையும் மௌனமாக வாசிப்பித்துப் பொழிப்புக் கூறச் செய்தல், பந்திகளிலுள்ள விஷயங்களைப் பற்றிய சில வினக்களைக் கரும் பலகையில் எழுதிவிட்டு அவற்றிற்கு விடைகாணச் சொல்லல், இடையிடையே சில வாக்கியங்களை எடுத்து அவற்றிற் சில சொற்களைக் கரும் பலகையிற் குறித்து விட்டு அவை பாடத்தில் வரும் இடங்களைக் காணுமாறு ஏவுதல், மாணவர்களையே கொண்டு வினக்கள் வினவுவித்தலும் விடைகாணச் சொல்லுதலும் முதலியன குறிப்பிடத்தக்கன.

நாலாம் ஐந்தாம் வகுப்புக்களில் மௌன வாசிப்பும் உரத்த வாசிப்பும் சமமாக நிகழலாம். உயர்தர வகுப்புக்களில் மௌன வாசிப்பே அதிகமாக இருக்கவேண்டும். வாசினைப் புத்தகங்களை மாத்திரமன்றி ஏனைய பாடநூல்களையும் வாசித்துஅறிவைப் பெருக்குவதற்கு மௌன வாசிப்பு இன்றியமையாதது. இக்காலத்தில் அளவிறந்த நூல்களை வாசிக்க வேண்டியிருப்பதால் காலம், முயற்சி முதலியவற்றைக் குறைத்துச் சிந்தனை, கருத்து முதலியவற்றை வளர்த்து, ஒலி உறுப்புக்களுக்குஞ் சிரமமின்றி விரைவாக வாசிப்பதற்கு வேண்டிய

ஆற்றலை மாணவர்கள் பாடசாலையை விட்டுப் போக முன்னர் பூரண மாகப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மௌனமாக வாசிக்கச் சொன்னால் உதடுகளை அசைத்துச் சிலர் வாசிக்கிறார்கள். வாய் திறவாமல் வாசிக்கும் பழக்கத்தை நன் முறை யிற் பயிலாமையே இதன் காரணம். மௌன வாசிப்பின் பிரதான அம்சங்களில் விரைவும் ஒன்றாகும். பழகிய ஒருவர் ஒரு நிமிஷத்தில் 80 முதல் 120 சொற்களை வாசிக்கலாம் என்று கணக்கிட்டுளர். விரை வினைப் படிப்படியாக ஏற்படுத்த வேண்டும். இந்த விரைவு பாட அறிவு, கவனம், கண்நகர்ச்சி, பொருளுணரும் ஆற்றல், மொழியறிவு, அனுபவம், விவேகம் முதலிய பலவற்றிலே தங்கியுளது. நிற்க;

உரத்த வாசிப்புக் கீழ் வகுப்புக்களில் மௌன வாசிப்புக்கு ஆதா ரமாக இருந்தாலும் மேல் வகுப்புக்களில் இதற்கு மௌன வாசிப்பே ஆதாரமாயிருக்கிறது. மேல்வகுப்புகளில் உரத்த வாசிப்பின் நோக்கம் வாசிக்கும் பகுதியைக் கேட்போர் இலகுவில் விளங்கச் செய்தலே என்று கண்டோம். இவ்வாறு செய்வதற்கு வாசிக்கும் பகுதியை முன்னரே மௌனமாக வாசித்து நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். உரத்த வாசிப்பின் மற்ற நோக்கம் ஓசையின்பத்தை வாசிப்பவரும் பிறரும் அனுபவிக்கச் செய்தல். இலக்கிய பாடத்திலே இது நிகழும் இதற்கும் பொருள் விளக்கமும், உணர்ச்சியும் ஏற்படவேண்டும். இவற்றை மௌன வாசிப்பின் மூலம் பெறுதலே நன்று.

எந்தப் பாடத்தையுஞ் சித்தியுறக் கற்பித்தற்கு அப்பாடத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தவேண்டு மென்பதை ஆசிரியர்கள் நன்கு அறிவர். வாசிப்புப் பாடத்திற்கும் இஃது இன்றியமையாதது. மாணவர்கள் பிற்காலத்தில் தம் அறிவைப் பெருக்குவதற்குப் பல நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிக்க முயல்வது பாடசாலைகளில் அவர்கள் வாசிப்பிற் கொண்ட ஆர்வத்தையே பொறுத்துளது.

ஆகவே, பாடசாலைகளில் வாசிப்புப் பாடத்தை நல்ல முறையில் மாணவர் விரும்பிக் கற்கத்தக்கதாக நடத்துதல் வேண்டும். கீழ் வகுப்புக்களில் நல்ல வாசினைப் புத்தகங்களை ஆசிரியர்கள் உபயோகப் படுத்துவதுடன் சிறுவர்களுக்கு நாட்டத்தைக் கொடுக்கும் கதைகள், பாட்டுகள், நாடகங்கள் முதலியவற்றையும் வாசிக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் பொருத்தமான நூல்களைக்கொண்ட வகுப்புநூல் நிலையங்கள் பாடசாலைகளில் இருத்தல்வேண்டும். மாணவர்கள் தாம் தாம் விரும்பிய நூல்களை எடுத்து வாசித்தல் வேண்டும். இக்காலத்தில் மாணவர்களுக்கு ஏற்ற தமிழ் நூல்கள் பல வெளியிடப்பட்டுள. ஐம்பது ரூபா வரையில் செலவு செய்தால் ஒவ்வொரு வகுப்புக்கும் போதிய நூல்களை வாங்கி வகுப்புநூல் நிலையங்களை ஏற்படுத்தலாம். மாணவர்களுக்குப் பரந்த வாசிப்பில் ஆர்வம் ஏற்படுவதற்கு வகுப்புநூல் நிலையங்கள் இன்றியமையாதன என்பதை ஆசிரியர்கள் யாவரும் அனுபவத்தினால் நன்கறிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

கா. போ. இரத்தினம்.

# பயிற்சி மாற்றம்

(முற்றுெடர்)

பயிற்சி மாற்றம் இயல்பாகவே மூளையுள் நிகழக்கூடியதொன்றன்று. அதனை நாம் பண்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஒரு பொதுப் பொருள் பலநிலைகளுக்கிடையில் இயங்கும்போது மூளைக்கு ஒவ்வொரு நிலையும் அனுபவமான பழையது போலத் தோன்றும். இதனுடைய உண்மையானது, பொதுப் பொருளை மூளை உணரும்போதன்றிப் புலப்படாது. பொதுப் பொருள் இருந்தும் உணர்ச்சியின் மேல், கற்பவருக்குப் பயனில்லை. பொதுப் பொருளின் உண்மையை அறியும் அறிவே, தொடர்புடை எண்ணங்களுக்கும் பகுத்தறிவிற்கும் மூலாதாரமானது.

கல்வி கற்பிக்கும்போது பிள்ளைகளுக்கு நாம் சொல்லவேண்டியது யாதெனில், புதுப் பொருள்களோ புது நிலைமைகளோ ஏற்படும்போது அவற்றுள் தாம் முன் பழகியுள்ள பழைய ஒருமைப்பாடுகள் உண்டோ என்று ஆராய்தல் என்பதே. நாம் ஒருபடி கூடவும் சென்று பொதுப் பொருள் காணும் 'பழக்கம்' என்று ஒரு பழக்கத்தையும் விருத்திசெய்துவிடலாம். பிள்ளை தான் காணும் எதற்கும், தன் அனுபவத்தில் முன்கண்ட பொருளோடு சம்பந்தம் யாதாயினும் உண்டாக்கித் தொடர்புபடுத்தி ஆட்சிப்படுத்தியும் கொள்ளல் வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பழக்கம் பிள்ளைகளிடம் உண்டாகவேண்டும். அப்பொழுது புதிய சந்தர்ப்பம் எல்லாம் பழையனபோல் மலைப்பின்றி ஆட்சிப்படும்.

இப்பயிற்சிகளுள் ஏதாவது குறையிருப்பின் அது—களைப்பு, உடல் சூன்றல், மனநிலைத் தாழ்வு முதலிய காரணத்தால் வரும். அக்குறைகளையும் நிறைவுபடுத்தலாகும்.

20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உளநூல் வல்லார் சில பிரச்சினைகளை விடுத்தனர். பயிற்சி குறிப்பாக மூளையின் ஒரே பாகத்திற்கா, அன்றி முழுமையும் விருத்திபெறுவதற்கா? என்பது எழலாயிற்று. ஒரு பாடத்தினுல் எழும் மூளையின் ஆற்றல் எல்லாப் பாடத்திற்கும் உதவுமா என்று கருதினுர்கள் கல்வி வல்லார்.

மூளையின் பல்வேறு பாகங்கள் வெவ்வேறு தொழில் புரிவனவாகும். காட்சி, பதிவு, எண்ணம், நியாயம் - என்பன தொழிற்படும் துறைகளுள் சில. பயிற்சியானது இப்படிப்பட்ட துறைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறித்த விகிதப்படி விருத்தி கொடுக்கும். அவ் விகிதம் இத்துறைகளுள் தங்கியிருக்கும் பொதுப் பொருளைப் பொறுத்துள்ளது. மேலும், அது பயிற்சியின் தன்மையிலும் தங்கியுள்ளது. ஆனுல், ஒரே துறையில் அபரிமிதமான பயிற்சி செய்யினும் அது பிறிதொன்றிற்குப் பயன்படாதென்றறிதல் வேண்டும். உவந்த பழக்கமும் மூளையின் உவந்த தன்மையும் இலட்சிய விடாய்ப்பும் பயிற்சிக்கு ஆதாரமாவன. பயிற்சி மாற்றம் விருத்தி செய்யின் பயன்படும்.

(தொடரும்)

அ. வி. மயில்வாகனம்

211
247
261

# இன்றைய இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சி

பழையன கழியப் புதியன புகும் என்பர். பழையனவும் புதியனவும் ஒன்று சந்தித்தல் அரிது. ஆனால் எங்கள் இலங்கை பழையனவற்றையும் புதியனவற்றையும் ஒன்றுசேர்த்துக் காணும் நாடுகளுக்கு ஓர் சீரிய எடுத்துக்காட்டாக இன்று மிளிர்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

கிறிஸ்து பிறக்க மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே தன் பண்பாட்டை ஆக்கி அந்நாட் தொடக்கம் அதனை வளர்த்து வந்தது இலங்கை. பூகோள அமைப்பில் அது அமைந்துள்ள தானமும் பழைய, புதிய பண்பாடுகள் சந்திப்பதற்குவப்பாயமைந்திருந்தது. பரந்த இந்து சமுத்திரம் என்ற ஆழியிலே அரபிய, இந்திய, சீன வர்த்தகரும் கிரேக்க, உரோம, பாரசீக வர்த்தகரும் தம் மரக்கலங்களைச் செலுத்தி வந்தனர். இந்தியாவுக் கண்மையில் இலங்கை இருப்பதனால், அந்நாட்டுடன் இந்நாடு பூர்வ காலத்திற் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்புகளும் மிக நெருக்கமாகவே இருந்தன. எனவே இந்தியரின் சந்ததியாரான பல்வேறு மக்களுக்கும் இந்திய பாஷைகளுக்கும் இந்தியப் பண்பாட்டுக்களுக்கும் இவ்விலங்கை பன்னூற்றுக் காலமாக இடமளித்துவந்தது. இலங்கையைப் பரிபாலித்த அரசர்கள் தமது கொலுக்களை இந்திய முறையில் அமைத்து தேச விசாரணை செய்து இந்திய முறையிலேயே அரண்மனை வாழ்க்கையை நடத்தினர். சித்திரம், சங்கீதம், வாய்ப்பாட்டு, நாட்டியம் ஆதியாம் நுண்கலைகளுக்கு ஓர் பிரதான அந்தஸ்து வழங்கப்பட்டது. அரச அரண்மனையில் இருந்த பெண்கள் இந் நுண்கலைகளில் நல்ல தேர்ச்சியடைந்திருந்தனர். மகா பராக்கிரமபாகுவின் பட்டமகிஷி நாட்டியக்கலை

யில் அதிதேர்ச்சியுற்றிருந்தாள் என்று மகா வம்சப் கூறுகிறது. பாரத நாட்டில் குப்த அரசர்கள் காலத்தில் அவர்களது அரண்மனை களில் நுண்கலைவிருத்தி, நாகரீக, சீர்திருத்தவளர்ச்சி, பெருங்குல பழக் கம் என்பன எவ்வாறு இருந்தனவோ, அவ்வாறே பூர்வத்து இலங்கை மன்னர் அரண்மனைகளிலும் இருந்தனவென்று எண்ணுதற்கு இட முண்டு. ஐம்புலன்களுக்கும் ஆனந்தம் அளிக்கும் வாழ்க்கையை ஆரிய நாட்டில் சம்பூரணமாக அனுபவித்ததுபோல இங்கேயும் அக்காலத் தில் நம் நாட்டு மன்னர் அனுபவித்தனர் என்பதற்குச் சான்றுகள் உள. ஓர் இந்திய மன்னனுக்கிருந்த மாடமாளிகைகள், கூடகோபு ரங்கள், நீராடற்கேற்ற அலங்காரப் பொய்கைகளுடனும் நீர்ச் சுனை களுடனும் கூடிய நந்தவனங்கள், பாடவும் ஆடவும் பாவலர் நவிலும் பண்பார் கவிகள் செவிமடுத்தின்புறுதற்குமான மணிமன்றங்கள், பன்னிறப்பட்சி ஜாலங்கள், பல மணமலர்கள் என்னும் இன்னோரன்ன கோலாகலவைபவங்கள் இலங்கை மன்னரது ஆஸ்தான அம்சங்களா கவும் விளங்கின. அன்றிருந்த மாட்சியை—அலங்காரகாட்சியை இன்று நாம் செய்யும் தொல்பொருளாராய்ச்சியினுல் ஒருவாறு நம் மனக்கண்ணுற் பார்க்கலாம். அநுராதபுரத்தில் திஸவேவவாவியின் பாங்கரில் பழையகால அரசரது உத்தியாவனம் இருந்ததாக சமீப காலத்திற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அரச உத்தியாவனத்தை எவ்வாறு அமைக்கவேண்டும் என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட் டதோ அவ்வாறே அதனையும் அக்காலச்சிற்பி அமைத்தான் என்று இப்போது நடைபெறும் ஆராய்ச்சியினுல் நன்கு புலப்படுகிறது. பரந்த வெளிநிலங்கள் உத்தியாவனத்தில் இருக்கவேண்டும். இடையிடையே, நறுமண மலர்கள் புஷ்பிக்கவும், பலவித நீர்ப்பட்சிகள் சஞ்சரிக்கவும் ஆடவர் மகளிர் நீர்விளையாட்டுக்கள் புரியவும் கவின் பெறு பொய்கை கள் இருக்கவேண்டும். இன்னும் அவ்வுத்தியா வனப்பூமி ஒரே மட்ட மாக இராது, கண்காட்சியளிப்பதற்கும் பல் வேறு தோற்றங்கள் அளிப்பதற்கும் மேடுபள்ளமாக இருத்தல் வேண்டும். இதன்பொருட்டு

அங்கே இயல்பாகவே அமைந்துள்ள குன்றுகளை அக்காலக்கம்மியர் மிகநுண்ணிய முறையில் அழகுறச் செதுக்கி "வேனிற்கூடங்கள்" "மாடங்கள்" "முற்றங்கள்" அமைக்க அவற்றில் மன்னன் இருந்து அரண்மனை மங்கையர் பொய்கைகளில் விளையாடுவதைநோக்கி மகிழ்வான்: அல்லது நிலாக்காலத்தில் முழுமதித்திங்கள் தன் குளிர்ச்சியான கிரணங்களை வீச அதன்கீழ் இருந்து கொண்டு பாடகர்களின் சங்கீத விருந்தையனுபவிப்பான்: அல்லது நாவலரின் நந்தாக்கவிகளைச் செவிமடுப்பான். அநுராதபுரத்தில் இருந்த அரச உத்தியாவனத்தின் அலங்காரங்களை இன்று நாம் எண்ணும்போது, மகாகவி காளிதாஸன் இயற்றிய சாகுந்தலம் என்னும் ஒல்காப்பெரும் காப்பியத்தில் வருணிக்கப்பட்ட காட்சிகளே எம்மனக்கண்முன் தோன்றுகின்றன. சீயகிரிச் சுவரோவியங்களை நாம் நோக்கும்போதும், அக்காலத்து இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த மன்னர்களது பெருங்குலப் பண்பு, நாகரீக சீர்திருத்தவளர்ச்சி, கோலாகல வாழ்க்கை என்பவற்றின் தன்மை எமக்குப்புலப்படுகிறது. இற்றலிய மறுமலர்ச்சிக் காலத்திலே இற்றலிய மக்கள் எவ்வாறு தம் வாழ்க்கையைத்திறம்பட நடாத்தி அதனைப்பரிபூரணமாக அநுபவித்தனரோ அவ்வாறே இலங்கை இந்தியா என்ற இருநாடுகளிலும் பெருங்குடிமக்கள் தம் வாழ்க்கையை அக்காலத்தில் நடாத்தினர் என்க.

ஆனால் மேலேகாட்டிய கோலாகலப் பண்பாட்டு வாழ்க்கையைத் தான் மக்கள் யாவரும் அநுபவித்து ரசித்தனர் என்று சொல்வதற்கில்லை. உலகின் எப்பாகத்தை நோக்கினாலும் அங்கே விவசாயச்சமூகத்தினர் கஷ்டமான வாழ்க்கையையே நடத்தினர் என்பது புலப்படும். அவர்கள் நெற்றிவியர்வை சிந்தப்பாடுபட்டுழைத்தால்தான் மக்கள் அனைவரும் தம் உணவைப் பெறமுடியும்: உணவுவிருத்திக்கு நீர்ப்பாசனத்தொண்டு அவசியம்: எனவே அந்நீர்ப்பாசனத் தொண்டிலேயே சமூகத்தின் செல்வமும் அபிவிருத்தியும் தங்கியிருந்தன. நீர்ப்பாசனத்

துக்கேதுவான குளம் கட்டுதல் முதலாம்தொண்டுகளை பூர்வகாலவிவசாயிகள் அரும்பாடுபட்டுச் செய்தனர். தொல்பொருளாராய்ச்சியில் முனைந்துள்ளார், முந்தியகாலச் சாதாரண மனிதனின் வாழ்க்கையை பற்றிய விபரங்களை எமக்குத்தரவில்லை. அக்காலத்துச் சாதாரண மனிதன் தன் இல்லத்தினை அழிந்துபோகக்கூடிய சாமானியஉபகரணங்களைக்கொண்டு கட்டினான்: எனவே காலச்சக்கரத்தில் அகப்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக அவை அழிந்து இருந்த இடமே தெரியாதிருக்கிறது. பூர்வகாலப் பொதுமக்கள் எவ்வாறு தம் வாழ்க்கையை நடாத்தினர் என்பதைத் தெளிவாகவிளக்குதற்கு அக்காலத்துநூல்கள் தாமும் உதவிசெய்வனவாகவில்லை. இந்நூல்கள் பெரும்பாலும் நீதிநூல்களாயும் சமயசம்பந்தமானவையாகவும் இருந்தபடியினால் அவை சாதாரணமக்களின் அன்றாடவாழ்க்கையைப் பற்றிய விபரங்களைத் தெரிவிப்பனவாகவில்லை. ஆனால் எம்பழங்குடி மக்களைப்பற்றி ஒரே ஒரு விஷயம் நல்லாகத் தெரிகிறது. அதாவது அவர்களுடைய வாழ்க்கையிலே பௌத்த தர்மம் முக்கிய பங்கெடுத்து அவர்களது வாழ்க்கைநெறியை அமைத்திருப்பது என்பதே; இன்று அகப்படும் நூல்களில் இருந்து இவ்விஷயம் நன்கு தெரிகிறது. அக்காலத்திலே "பௌர்ணமை"த் தினம் மக்களின் சமுதாய வாழ்க்கையில் பெரும் தினமாக—விசேஷ தினமாக இருந்தது. விகாரையே மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்குரிய புனித ஸ்தலமாகவிருந்தது. இதனாலன்றோ, அக்காலத்து இலங்கையிலிருந்த சிறந்த, உறுதியான கட்டிடங்கள் சமயசம்பந்தமானவையாக இருந்தன. இக்கட்டிடங்களில்தான் மத உணர்ச்சியும் ஆக்கற் சக்தியும் பரிணமித்தன. இவ்வுணர்ச்சியும் சக்தியும் சேர்ந்தே அந்தக் கட்டிடங்களை நிருமாணித்தன என்று கூறலும் பொருந்தும்: சமயசம்பந்தமான இப்புராதன கட்டிடங்களின் தன்மைகளை மேலாழ்ந்தவாரியாகத்தானும் ஒருவர் நோக்குங்கால் அவற்றிலே புராதன காலச் சிங்களமக்களுக்கே விசேஷமானதெனக் கொள்ளப்படும் தன்மை இருப்பதைக்காணலாம்: கிறிஸ்து பிறக்க ஒரு நூற்றாண்டுக்குமுன் நிறுவப்

பட்ட "கண்டகசைத்திய"த்தை ஓர் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். மலைஉச்சியிலே அம்மலையின் சிகரமணிபோல் அது விளங்குகிறது. ஓர் "சைத்திய"த்தின் அமைப்பை ஈண்டுவிபரித்தல் பொருத்தமுடைத்தாகும். முதலில் முட்டைவடிவான அமைப்பின்மேல் நாற்சதுரப்பெட்டிபோன்ற அமைப்பு இருக்கும்: இச்சதுரத்தின் மத்தியிலிருந்து வானுறவோங்கும் கோபுரம்; அது வெள்ளைவெளேரென இருக்கும். நாலுபக்கங்களிலும் அலங்கார வேலைப்பாடமைந்த வாயில்கள்—"வாஹல்கடை" - இருக்கும். ஒவ்வொரு வாஹல்கடையும் நாலு நாலு பிரதான வாசல்கள் உடையதாக இருக்கும். சைத்திய அமைப்பு சுலபமானது. மிகவும் ஆதிகால ஸ்தூபிகள் விஷயத்தில் அவற்றுக்கான இடம் ஓர் வட்டத்துக்குள் அடங்கியிருந்தது. ஆனால் பிற்காலத்தில் அந்த இடம் சதுரமாயது. ஸ்தூபியைச்சுற்றி மதில் எழுப்பப்படும்: மதிலில் நான்குபக்கங்களிலும் நான்குவாயில்கள் உள. இவற்றுட்பிரதான வாயிலில்இருந்து, நாலுபடிக்கட்டுகள் மேடைக்குச் செல்லும். இம்மேடையின் மத்தியில்தான் "சைத்திய"த்தின் கோளவடிவபாகம் எழுப்பப்பட்டுள்ளது. வாயில்களையும் படிக்கட்டுகளையும் எதிர்நோக்கியுள்ள ஸ்தூபியில் அலங்கார வேலைப்பாடுகள் மிளிரும். இந்த வேலைப்பாடுகள் சாதாரணமாகத் தோற்றமளிக்கக்கூடிய ஸ்தூபிக்கு ஓர் அழகையும் கவர்ச்சியையும் கொடுக்கின்றன. இவ்வாறாக அமைந்துள்ள புராதனகால "சைத்திய" அமைப்புமுறை ஆடம்பரமற்றது; ஆனால் சிறப்பும் கண்ணியமும் வாய்ந்தது. அது தனக்கென ஓர் விசேஷ வனப்பைக்கொண்டதாக இருக்கிறது. பொன்னின்கலம் போன்ற அதற்கு வேறு பொட்டிடவேண்டிய தேவையில்லை. பால் போன்ற வெண்ணிறமுள்ள இந்த ஸ்தூபிகளை வனங்கள் சூழ்மேடுகளில் அல்லது உத்தியா வனங்களில் அல்லது நந்தவனங்களில் அமைக்க நீல நிறவானத்தில் ஆதவன் அழகிய தன்கிரணங்களை அவற்றின்மீது வீசும் போது அக்காட்சியின் மாட்சிதான் என்ன! புராதனகால எகிப்திய பிரமிதுகள் எவ்வாறு ஆடம்பரமற்றனவாய், ஆனால் ஓர் தனிச்சிறப்பு

நடையளவாய், இருக்கின்றனவோ, அவ்வாறே புராதன இலங்கையின் ஸ்தூபிகளும் உள்ளன. இவ்வாறாய ஆடம்பரமற்ற தன்மை புராதன காலச்சிங்களரது எல்லாக் கட்டடங்களுக்கும் சிறப்பாக அமைந்தது. "பூசை அறை" அல்லது "பிலிமகே" என்பதன் அமைப்பை இவ்விஷயத்தில் அவதானித்தல் பொருத்தமாகும். இது நாற்சதுர அல்லது நீள்சதுரமானதாய், பெட்டகம்போன்று செவ்விதில் அமைக்கப்பட்ட மேடைமீது விளங்கும். பூசையறைக்குச் செல்லுவதற்கு ஓர் வாசல் உண்டு. வாசலுக்குச் செல்ல சில படிக்கட்டுகள் உள. படிக்கட்டுகள் தொடங்கும் இடத்தில் அரைவட்டமான கல்லொன்று இருக்கும். இக்கல்தான் இலங்கையின் பிரசித்தி வாய்ந்த சந்திரகாந்தக் கல். வாசலில் துவாரபாலகர் போல இரண்டு கற்கள் நாட்டப்பட்டிருக்கும். வெளிச்சுவர்களுக்கு வெள்ளைவெளேர் என்ற வெண்சாந்து பூசப்பட்டிருக்கும். கூரைக்குப்பன்னிறமான வழவழப்பான ஓடுகள் இடப்பட்டிருக்கும்; அல்லது கூரைக்குப்பதிலாக முட்டைவடிவமான பாரிய அமைப்பினை இயற்றி, அதனைச்சுற்றி நாலு மூலைகளிலும் சிறிய முட்டைவடிவமான அமைப்புக்களைச் செய்வர். இந்த விதமான அமைப்பு இந்தியாவில் உள்ள தாஜ்மஹாலை எமக்கு ஞாபகப்படுத்துவதாயிருக்கிறது.

பிற்காலத்தில் அதிலும் விசேஷமாக தென்இந்தியர் வடஇலங்கை மீது படையெடுத்த பின்னர், பௌத்த சிற்ப முறையிலே பண்டுதொட்டிருந்த ஆடம்பரமற்றதன்மை நீங்க, தென்இந்தியக் கோவில்களில் காணப்படும் ஆடம்பர அலங்கார முறை இங்கும் படிப்படியாக ஏற்பட்டது. இச்சிற்ப முறையில் நிருமாணிக்கப்பட்டனவற்றுக்குச் சிறந்த உதாரணங்கள் பொலன்னருவையில் இருந்த விகாரைகளாகும். யப்பஹுவ, கண்டி என்னுமிடங்களிலும் இந்த அதிஅலங்காரச் சிற்ப முறையைக் காணலாம்.

இனி, இலக்கிய விஷயமாகவும் ஓர் மாற்றம் நிகழ்ந்தது. பண்டைக் காலச்சிங்களப் புலவர்களும் கலைஞரும் ஆடம்பரமற்ற பாணியில் தம்

நூல்களை ஆக்கினர். ஆனால், பிற்காலத்தவர் அம்மரபினின்றும் விலகி அலங்காரநடையில் கற்பனை இலக்கியச்சிருஷ்டியில் ஈடுபட்டனர். கோட்டை ராஜதானியாக இருந்த காலத்தில் ஆக்கப்பட்ட இலக்கியநூல்கள் அவற்றிலும் விசேஷமாகக் காவியங்கள் மாமூலான வெளிஅலங்கார நடையினவாய் இருந்தன. சொல்அழகு அலங்கார அமைப்பு என்பவற்றையே பிற்காலப் புலவர்களும் கலைஞர்களும் லட்சியமாகக்கொண்டு யதார்த்தத்தையும் சத்தியத்தையும் தியாகம் செய்தனர் என்றும் கூறலாம்.

இன்றும் இலங்கையிலே பௌத்த மதம் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பௌத்த கலைகளதும் சிற்பநுண்கலையினதும் விருத்தியானது, பல்லாண்டுகால அந்நியரது ஆதிக்கத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இடைஞ்சற்பட்டது. சமய சம்பந்தமான; சமய நூல்களுக்கு ஊற்றாகிய பாலி மொழியை பௌத்த குருமார் மாத்திரமே கற்க அம்மொழி விகாரைகளில் ஒதுங்கிக்கிடந்தது. நாட்டுமக்களின் பாஷையான சிங்களமோ சமீபகாலம்வரை நாட்டுப்புறமக்களுக்குத் தான் உரியபாஷையென மதிக்கப்பட்டுத் தன் நிலையிழந்து தவித்தது. அந்நியக்கலைகளில் தேர்ச்சிபெற்று நகரங்களில் வாழ்ந்தோர், சிங்களப் பாஷையைப்புறக்கணித்தனர். சிங்களப்பாஷையைப் பேசுவது கௌரவக்குறைவு என்றும், அது ஓர் நாகரீகமற்ற பாஷையென்றும், அது நாட்டுப்புறப் பட்டிக்காட்டார்க்குத்தான் ஏற்றது என்றும் இவர்கள் இப்பாஷையை உதாசினப்படுத்திப் புறக்கணித்தனர். பாஷையைப் புறக்கணித்ததுபோலவே அவர்கள் தம்நாட்டில் தொன்றுதொட்டுவந்த ஆசாரானுட்டானங்களையும் எள்ளிநகையாடினர். ஆனால் இந்த ஆசாரானுட்டானங்கள் அழிந்துவிடவில்லை. பௌத்த பிக்குகளும், நாட்டுப்புறக்குடியானவர்களும் அவற்றைப்பேணிவந்தனர். தற்கால இலங்கையின் பண்பாடு என்னும் நிலையத்துக்கு, சிங்கள பௌத்த பண்பாடு ஓர் உறுதியான பிரதானமான தூண் என்று கூறினால் அது மிகை

யாகாது. இப்பண்பாடு சிறந்த, குறிக்கத்தக்க ஓர் வாழ்க்கைநெறியின் சின்னமாக மிளிர்கின்றது. இப்பண்பாடு இந்நாட்டுக்கே விசேஷமாக வுள்ள இலக்கியம், சித்திரம், ஓவியம் சங்கீதம், சிற்பம் என்னும் கலைகளுடன் நெருங்கிய தொடர்புள்ளது.

இன்றைய இலங்கைப்பண்பாட்டுக்கு ஆதாரமாகவுள்ள இன்னோர் சாதனம் ஹிந்து மதமாகும். இதுவும் இந்தியாவையே தனது தாயகமாகக்கொண்டது. சிங்களர் பண்பாட்டிற்கு பாலி மொழி எவ்வாறு இருந்ததோ அவ்வாறே சமஸ்கிருதமும் தமிழும் இலங்கையில் நிலவியுள்ள ஹிந்துப்பண்பாட்டுக்கு ஆதாரமாக இருந்தன. ஹிந்து மதமும் ஓர் "வாழ்க்கைமுறை"யே. அதுவும் தன்னகத்தே சரித்திரப் பெருமை வாய்ந்த தொன்மையான இலக்கியத்தையும் சங்கீதத்தையும் வேறும் பல நுண்கலைகளையும் கொண்டுள்ளது. ஆகவே நமது இலங்கையில் பௌத்தப்பண்பாடு என்றும் ஹிந்துப்பண்பாடு என்றும் இரண்டுபிரதான பண்பாட்டுக்கள் உள. இப்படியாக இருந்தலினாலேயே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்புளதென்றும், இலங்கை இன்றைய இந்தியாவின் ஓர்பகுதியாக இருக்கவேண்டும் என்றும் சில அரசியல்வாதிகள் கூறுவர். ஆனால் "தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு;" பிள்ளை தன்தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யப்பின்னிற்கமாட்டாள். ஆனால், அவளும் சுதந்திரமாக வாழ்வதற்கு உரியவளாவாள் என்பதைக்குறித்துக்கொள்ளல் வேண்டும். இந்நாட்டு மக்கள் பரத நாட்டுடன் பண்பாட்டுத் தொடர்புடையவர்களாயிருந்த போதிலும், தம் வாழ்க்கையைத்தாம் விரும்பியபடி அமைத்துச் சுதந்திரமாக நடக்க விரும்புகிறார்கள்.

இலங்கையுடன் தொடர்பு கொண்டுள்ள இன்னோர் பண்பாடு இஸ்லாமியப் பண்பாடு என்க. முஸ்லீம்கள் இந்த நாட்டிலே பன்னூற்றாண்டு காலமாக வாழ்ந்து, இன்று இந்நாட்டு மக்களில் ஓர் பெரும் கூட்டத்தினராகவிருக்கிறார்கள். இந்நாட்டைப் பரிபாலித்த

பௌத்த மன்னர் சர்வ சமய சமரச மனப்பான்மையினராயிருந்தமையினால் முஸ்லீம்கள் எவ்வித இடுக்கண்களுக்கும் ஆளாகவில்லை. சமீபகாலம்வரை இலங்கை முஸ்லீப்கள் ஏனைய இஸ்லாமிய நாடுகளுடன் அதிக பண்பாட்டுத் தொடர்பு வைத்திருக்க முடியவில்லை. அவர்கள் பழைய காலத்திலே இந்நாட்டில் ஓர் சமூகத்தாராக வாழ்ந்து தம் தொழில் முயற்சிகளைச் செய்து, எவ்விதத் தடங்கலுமின்றித் தம் சமயக்கோட்பாடுகளை அனுட்டித்துக்கொண்டுவந்தனர். விகாரைகளும் கோவில்களும் பழைய பௌத்த, ஹிந்து மதத்தினரின் சமய சின்னமாயிருப்பதுபோல, மசூதிகள் முஸ்லீம்களின் மத சின்னமாக விளங்குகின்றன. இலங்கையின் துறைமுகப் பகுதிகள் பலவற்றில் மசூதிகள் உள. ஓர் உஷ்ணப்பிரதேசத்துச் செயற்கை அமைப்பில் கவின்பெறுகிற அம்சமாக இஸ்லாமிய ஓவிய முறையைக்காட்ட இங்குள்ள மசூதிகள் விளங்குகின்றன.

(தொடரும்)

எழுதியவர்:—திரு. எஸ். எவ். டீ சில்வா

---

## TAMIL TERMS.

| | | | |
|---|---|---|---|
| 1. | Sir | — | ஐயா. |
| 2 | Dear Sir | — | அன்பார்ந்த ஐயா. |
| 3 | Madam | — | அம்மணி. |
| 4. | Dear Madam | — | அம்மணி. |
| 5. | Reverend | — | வண. (வணக்கத்துக்குரிய) |
| 6. | Rev. Father | — | வண. சுவாமி. |
| 7. | Brahma Sri | — | பிரம்ம ஸ்ரீ (Brahmin priests) |
| 8 | Yours truly | — | தங்கள் உண்மையுள்ள. |
| 9. | Yours faithfully | — | தங்கள் விசுவாசமுள்ள |
| 10. | Your obedient servant | — | தங்கள் பணிவுள்ள ஊழியன். |